## January 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தாய்லாந்து- கம்போடியா இடையிலான புதிய போர் நிறுத்த ஒப்பந்தம் 72 மணி நேரத்துக்கு மேல் நீடித்த நிலையில், கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்ட 18 கம்போடிய வீரர்களை தாய்லாந்து விடுவித்தது.

(i) போர் நிறுத்தம் 72 மணி நேரம் நீடித்தால் தங்களிடம் உள்ள 18 கம்போடிய வீரர்களை தாய்லாந்து விடுவிக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. அதன்படி, 72 மணிநேர போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து அந்த வீரர்களை தாய்லாந்து தற்போது விடுதலை செய்துள்ளது.

(ii) தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையே சனிக்கிழமை (டிச. 27) கையொப்பமான ஒப்பந்தத்தின் கீழ், தாக்குதல் நிறுத்தம், ராணுவ நடமாட்டங்களை நிறுத்துதல், எல்லையில் நிலக்கண்ணிவெடிகளை அகற்ற ஒத்துழைப்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

(iii) 11-ஆம் நூற்றாண்டு ஹிந்து கோயில் அமைந்துள்ள ப்ரே விஹேர் உள்ளிட்ட பகுதிகளை மையமாகக் கொண்டு தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையே எல்லைப் பிரச்னை நீடித்து வருகிறது. அந்தக் கோயில் கம்போடியாவுக்குத் தான் சொந்தம் என்று சர்வதேச நீதிமன்றம் கடந்த 2008- இல் தீர்ப்பளித்தது. இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை காரணமாக அவ்வப்போது மோதல் ஏற்பட்டுவந்தது.

2. உலகத் திலேயே வயதான, தொழில்முறை கால்பந்து வீரராக ஜப்பானை சேர்ந்த கஸுயோசஷி மியுரா (58) களம் காணவிருக்கிறார்.

(i) கடந்த 1986-இல் பிரேஸிலின் பிரபல கிளப்பான சான் டோஸ் எஃப்சியில் அறிமுகமான மியுரா, அதன் பிறகு இத்தாலி, குரோஷியா, ஆஸ்திரேலியா, போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலும் கிளப்புகளுக்காக விளையாடியிருக்கிறார்.

(ii) உலக அளவில், தனது 50- ஆவது வயது வரை (1965) கால்பந்து விளையாடிய இங்கிலாந்து முன்னாள் வீரர் ஸ்டான்லி மேத்யூஸ் வயதான கால்பந்து வீரராக பெருமை பெற்றிருந்தார். அந்த சாதனையை 2017- இல் முறியடித்த மியுரா, தற்போது 58 வயதிலும் விளையாடி வருகிறார்.

3.விஜய் ஹசாரே டிராபி கிரிக்கெட்டுடன் தொடர்புடையது.

4. கத்தாரில் நடைபெற்ற உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சென் சாம்பியன் ஆனார். இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி அரையிறுதியில் தோல்வி கண்டு வெண்கலப் பதக்கம் பெற்றார்.

(i) உலகின் நம்பர் 1 செஸ் வீரரான கார்ல்சென், தொடர்ந்து 9- ஆவது முறையாக பிளிட்ஸ் சாம்பியனாகி, அதிக முறை பட்டம் வென்ற தனது சாதனையை நீட்டித்து வருகிறார்.

5. பெங்களூரில் இருந்து சர்வதேச அளவில் செயல்பட்டு வந்த 'காட்' போதை இலை கடத்தல் வலைப்பின்னலை தேசிய போதைப்பொருள் தடுப்புத் துறை

கண்டுபிடித்துள்ளது.

(i)கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் தெற்கு யேமன் நாட்டில் பரவலாக விளைவிக்கப்படும் 'காட்' இலைகள், தேயிலையைப் போலவே காட்சி அளிக்கும் போதைப் பொருளாகும். இந்த வகை தாவர இலைகளின் விளைச்சல், விநியோகம் மற்றும் விற்பனையை உலகின் பல நாடுகள் தடை செய்துள்ளன.

(ii) அதேபோல, 2018-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின்படி இந்தியாவும் போதைப் பொருள்களின் பட்டியலில் 'காட்' இலைகளைச் சேர்த்துள்ளது.

(iii) இந்நிலையில், பெங்களூரில் 'காட்' போதை இலைகள் இருப்பதை தேசிய போதைப் பொருள் தடுப்புத் துறை கண்டுபிடித்துள்ளது. உளவுப் பிரிவு அளித்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் தடுப்புத் துறை நடத்திய சோதனையில் பெங்களூரில் ரூ.8 கோடி மதிப்பிலான 'காட்' போதை இலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. போதைப் பொருள் தடுப்புச்சட்டம் 2018 அமலுக்கு வந்த பிறகு நடைபெற்றுள்ள பெரிய அளவிலான 'காட்' போதை இலை வேட்டை இது என்று கூறப்படுகிறது.

6.வரும் பிப். 1-ஆம் தேதிமுதல் புகையிலைப் பொருள்களுக்கு கூடுதலாக கலால் வரி, பான் மசாலாவுக்கு புதிய செஸ் வரி விதிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்தது.

(i)இது தொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையில், 'பிப். 1-ஆம் தேதிமுதல் பான் மசாலா, சிகரெட், புகையிலை மற்றும் அதுபோன்ற பொருள்களுக்கு 40 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியும் (ஜிஎஸ்டி), பீடிகளுக்கு 18 சதவீத ஜிஎஸ்டியும் விதிக்கப்படும். அத்துடன் புகையிலை மற்றும் அதனுடன் தொடர்புள்ள பொருள்களுக்குக் கூடுதலாக கலால் வரி, பான் மசாலாவுக்கு புதிய செஸ் வரி விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ii) மேலும், மெல்லும் புகையிலை, ஜர்தா மற்றும் குட்கா பேக்கிங் இயந்திர விதிகள் 2026- ஐயும் மத்திய நிதியமைச்சகம் அறிவித்தது.

7. செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கீரப்பாக்கத்தில் ரூ.17.01 கோடியில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாதெமி அமைக்கும் பணியை சென்னையில் முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின்.

8. மகாராஷ்டிர மாநிலம் நாசிக்-சோலாபூரின் அக்கல்கோட் பகுதிகள் இடையே ஆறு வழி பசுமைச் சாலை அமைக்க மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. இதனால் சென்னை-குஜராத்தின் சூரத் இடையிலானபயண நேரம் 45 சதவீதம் குறையும்.

(i) மகாராஷ்டிரத்தில் நாசிக்-சோலாபூரின் அக்கல்கோட் பகுதிகள் இடையே ரூ.19,142 கோடி மதிப்பில் ஆறுவழி பசுமைச் சாலை அமைக்க பிரதமர் மோடி தலைமையிலான சிசிஇஏ ஒப்புதல் அளித்தது. நாட்டின் தென் பகுதியை மேற்கு

பகுதியுடன் இணைக்கும் சென்னை-சூரத் அதிவேக வழித்தடத்தின் ஒரு பகுதியாக நாசிக்-அக்கல்கோட் ஆறுவழிச் சாலை அமைக்கப்பட உள்ளது.

(ii) 374 கி.மீ. தொலைவு கொண்ட இந்தச் சாலையை அமைக்கும் பணி 2 ஆண்டுகளில் நிறைவடையும். இந்தச் சாலையால் சென்னை- சூரத் இடையிலான பயண நேரம் 45 சதவீதம் குறையும். அத்துடன் சென்னை துறைமுகம், சூரத்தையொட்டி உள்ள ஹஜீரா துறைமுகம் இடையிலான போக்குவரத்து இணைப்பும் மேம்படும்.

9. உரிமக் கட்டணம், அலைக்கற்றை கட்டணம் ஆகியவற்றை தனது வருவாய் பங்காக தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மத்திய அரசுக்கு செலுத்த வேண்டும். இந்த வருவாய் பங்கை கணக்கிட பயன்படுத்தப்படும் வருவாய் தொகை ஏஜிஆர் என்றழைக்கப்படுகிறது.

(i) இந்நிலையில், நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள வோடஃபோன் ஐடியா நிறுவனம் மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.87,695 கோடி ஏஜிஆர் நிலுவைத் தொகையை 5 ஆண்டுகளுக்கு செலுத்தாமல் இருக்க பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தொகையை 2031-32-ஆம் நிதியாண்டில் தொடங்கி, 2040-41-ஆம் நிதியாண்டுக்குள் அந்த நிறுவனம் செலுத்தி முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ii) வோடஃபோன்–ஐடியா நிறுவனத்தில் மத்திய அரசுக்கு சுமார் 48.9 சதவீத பங்குகள் உள்ள நிலையில், அரசின் நலன் மற்றும் அந்த நிறுவனத்தின் 20 கோடி வாடிக்கையாளர் நலன் கருதியும், தொலைத்தொடர்பு துறையில் போட்டி இருப்பதை உறுதி செய்யும் நோக்கிலும் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

10. கோல்ட்ரிஃப்' மருந்து தயாரிப்பில் 364 பாதுகாப்பு விதிமீறல்கள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளதாக மருந்து கட்டுப்பாட்டு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) மத்திய பிரதேசத்தில் 'கோல்ட்ரிஃப்' இருமல் மருந்தை உட்கொண்ட 22 குழந்தைகள் உயிரிழந்ததாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து, அதனைத் தயாரிக்கும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனிடையே, அங்கிருந்த மருந்துகளை பகுப்பாய்வு செய்ததில் அதில் டைஎத்திலீன் கிளைகால் என்ற ரசாயன நச்சு இருப்பது கண்டறியப்பட்டது. வழக்கமாக ரெசின், ஆயில், பெயிண்ட், மைதயாரிக்கும்போது அதனை திரவமாக்க பயன்படுத்தப்படும் கரைப்பான் சேர்மம் அது.

(ii) திரவ மருந்துகளில் ப்ரோபலின் கிளைகால் சேர்மம்தான் கரைப் பானாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், 'கோல்ட்ரிஃப்' மருந்தில் அந்த டைஎத்தலீன் கிளைகால் சேர்மம் கலந்திருந்தது கண்டறியப்பட்டது.

11. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் - சஞ்சய் மல்ஹோத்ரா

12. 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகள் -

(i) இந்தியப் பொருள்களுக்கு டிரம்ப் அறிவித்த 50% கூடுதல் வரி

(ii) பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் 'ஆபரேஷன் சிந்தூர்'

(iii) சீனா-தைவான் இடையிலான பதற்றம் அதிகரிப்பு

(iv) தாய்லாந்து- கம்போடியா ராணுவ மோதல்

(v) பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் படைகள் மோதல்

(vi) ஆப்கானிஸ்தானில் ஆயிரக்கணக்கானோரை பலிகொண்ட நிலநடுக்கம்

(vii) நேபாளத்தில் ஜென் இஸட் இளைஞர்களின் போராட்டம்

(viii) வங்கதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

(ix) ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான பூர்வகுடி மக்களின் போராட்டம்-